யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 11 | சங்கீதம்

பெயர் / சுட்டெண் : ..... திருமதி.வா.கவிதா B.FA, PGDE

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பல்லியம்

1. பல்வேறு வகையான இசைக்கருவிகள் ஒன்றாக இணைந்து இசைக்கப்படும் நிகழ்ச்சி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
2. இந்த நிகழ்ச்சியில் இடம்பெறும் வாத்தியங்களின் வகைகளைக் குறிப்பிடுக.
3. இப் பல்லிய நிகழ்ச்சியில் இடம்பெறும் நரம்புக்கருவிகள் மூன்று தருக.
4. பல்வேறு வாத்தியங்கள் ஒன்றுசேர்ந்து இசைப்பதை ரசிப்பதன் மூலம் வெளிப்படும் உணர்வு யாது?
5. பல்லிய நிகழ்ச்சியில் வாசிக்கப்படும் இரண்டு உருப்படிகள் தருக.
6. நீர் கண்டு ரசித்த பல்லிய நிகழ்ச்சி ஒன்றை பற்றி கட்டுரை வரைக

இசைநாடகம்

1. இசையுடன் கூடிய உரையாடல் மூலம் கதையைக் கூறும் நிகழ்ச்சி எது?
2. இசைநாடகத்திற்கு பொருத்தமான இரண்டு கதைகளைத் தருக.
3. இசைநாடகம் ஒன்றினை ஆக்கம் செய்யும் போது கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் எவை?
4. நீர் பார்த்து ரசித்த இசைநாடகம் ஒன்றில் ரசித்தற்குரிய அம்சங்களாக எதனைக் கூறவீர் ?

வர்ணம் (அன்னமே.....)

a. "அன்னமே.... "என்ற வர்ணம் அமைந்த.....
   1. இராகம் :
   2. ஆரோகணம் :
   3. அவரோகணம் :
   4. மேள எண் :
   5. இவ் இராகம் எடுத்துக் கொள்ளும் ஸ்வரஸ்தானங்கள் :
   6. தாளம் :
   7. இத் தாளத்தின் அங்கங்கள் :
   8. தாளத்தின் அட்சரம் :
   9. இவ் வர்ணத்தை முதலாம் காலத்தில் ஒரு ஆவர்த்தனத்தைப் பாடும் போது எடுத்துக் கொள்ளும் ஸ்வரங்களின் எண்ணிக்கை ?
   10. இவ் வர்ணத்தை இயற்றியவர் யார்?

www.ikedu.lk

11. இவ் வர்ணத்தில் காணப்படும் அங்கங்கள் எவை?
12. வர்ணம் என்ன வகை உருப்படி?

b. "ஸ்வாமி உன்னை ஸதா நினைந் திராப் பகல் வருந்துமென்....."என்ற வர்ணம் அமைந்த....
1. இராகம் :
2. ஆரோகணம் :
3. அவரோகணம் :
4. தாளம் :
5. இத் தாளத்தின் மறுபெயர் :
6. இவ் வர்ணத்தை இயற்றியவர் :

கீர்த்தனை (அள்ளியுண்டிடலாம் வாரீர்.....)

1. "அள்ளியுண்டிடலாம் வாரீர்...."என்ற பாடல் என்ன வகை உருப்படி?
2. "அள்ளியுண்டிடலாம் வாரீர்...."என்ற பாடல் அமைந்த...
   a. இராகம் :
   b. ஆரோகணம் :
   c. அவரோகணம் :
   d. மேள எண் :
   e. இவ் இராகம் எடுத்துக் கொள்ளும் ஸ்வரஸ்தானங்களைத் தருக.
3. "அள்ளியுண்டிடலாம் வாரீர்...."என்ற பாடல் அமைந்த....
   a. தாளம் :
   b. தாளத்தின் அங்கங்கள்:
   c. தாளத்தின் அட்சரம் :
   d. இத் தாளத்தின் மறுபெயர்:
4. இவ் உருப்படியில் குறிப்பிடப்படும் தமிழ் நூல்கள் மூன்றின் பெயர்களைத் தருக.
5. இவ் உருப்படியில் காணப்படும் தமிழ் அறிஞர் ஒருவரின் பெயரைத் தருக.

இராகமாலிகை (சின்னஞ்சிறு கிளியே...)

1. சின்னஞ்சிறு கிளியே..எனும் பாடல் எவ்வகை உருப்படி ஆகும் ?
2. இராகமாலிகை என்றால் என்ன?
3. சின்னஞ்சிறு கிளியே....எனும் உருப்படியில் வரும் இராகங்கள் எத்தனை?அவ் இராகங்களை ஒழுங்கு முறையில் தந்து அவற்றின் ஆரோகண அவரோகணங்களையும் தருக.
4. இப் பாடல் அமைந்த தாளம் யாது?
5. இவ் உருப்படியை இயற்றியவர் யார்?
6. இவ் உருப்படியில் "உச்சிதனை முகர்ந்தால் " எனும் பாடல் பகுதி அமைந்த இராகம் யாது?

தேவாரம் (மானினேர் விழி....)

1. மானினேர் விழி...எனும் தேவாரம் அமைந்த பண் யாது?
2. இப் பண்ணிற்குரிய இராகம் யாது?
3. மானினேர் விழி....என்ற தேவாரத்தை அருளியவர் யார்?
4. இத் தேவாரம் அமைந்த தாளம் யாது?
5. இத் தாளத்திற்குரிய சொற்கட்டு (ஜதிச்சொல்)அட்சர எண்ணிக்கை என்பவற்றைத் தருக.

www.ikedu.lk

6. இத் தேவாரம் அருளப் பெற்ற தலம் யாது?
7. தேவாரம் என்றால் என்ன?
8. தேவாரம் தோன்றிய காலப்பகுதியைத் தருக.

சாபுதாளம்

1. சாபுதாளத்தை வேறு எவ்விதம் அழைப்பர்?
2. நாடோடி கானத்தினின்று வந்த புராதன தாளம் எது?
3. இரண்டு தட்டுக்களாக அல்லது வீச்சும் தட்டுக்களாக போடப்படும் தாளம் எது?
4. சாபுதாளம் என்பது பொதுவாக எத் தாளத்தைக் குறிக்கும்?
5. சாபுதாளம் எத்தனை வகைப்படும்?அவை யாவை?
6. முதல் தட்டுக்கு ஒரு எண்ணிக்கையும், இரண்டாம் தட்டுக்கு இரண்டு எண்ணிக்கையும் கொண்ட தாளம் எது?
7. தகதகிட என்ற ஜதியைக் கொண்ட தாளம் எது?இத் தாளத்தின் அட்சர எண்ணிக்கை, போடும் விதம் ,உதாரணம் என்பவற்றைத் தருக.
8. மிஸ்ர சாபுதாளத்தின் ஜதியைத் தருக. இத் தாளம் எவ்விதம் போடப்படும்?
9. ஒரு ஆவர்த்தனத்திற்கு ஒன்பது எண்ணிக்கை உடைய தாளம் எது?
10. விலோமசாபு என்றால் என்ன?விலோமசாபு தாளத்தில் கிருதிகளை இயற்றியவர் யார்?
11. சாபுதாளத்தினைப் பற்றி விரிவாக ஒரு எண்ணக்கரு படவாக்கம் செய்க.

இராகலட்சணம் (பந்துவராளி)

1. பந்துவராளி இராகத்தின் மேள எண் யாது?
2. 72 மேளகர்த்தாவில் இந்த இராகத்தின் அமைவிடம் யாது?
3. ஆரோகண அவரோகணம் யாது?
4. கடபஜாதி சங்கையைக்காக இவ் இராகம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
5. இந்த இராகம் எடுத்துக் கொள்ளும் ஸ்வரஸ்தானங்கள் யாவை?
6. பந்துவராளி இராகத்தின் நேர்சுத்தமத்திம ராகம் யாது?
7. இவ் இராகத்தில் வெளிப்படுத்தப்படும் சுவை யாது?
8. தாரஸ் ஸ்தாயி காந்தாரத்துக்கு மேல் சஞ்சாரம் காண்பதற்கு அரிதான இராகம் எது?
9. இவ் இராகத்தில் அமைந்த விசேட சஞ்சாரங்கள் எவை?
10. இந்த இராகத்தில் எந்த ஸ்வரங்களை மூர்ச்சனை செய்வதினால் கனகாங்கி இராகம் வருகின்றது?
11. இவ் இராகத்தின் உருப்படிகள் ஆரம்பிக்கும் ஸ்வரங்கள், இராகச்சாயா ஸ்வரங்கள், நியாச ஸ்வரங்கள் என்பவற்றைத் தருக.
12. இவ் இராகத்தின் பண் யாது?
13. இவ் இராகம் ஹிந்துஸ்தானி இசையில் எவ்வாறு அழைக்கப்பட்டது?
14. இவ் இராகத்தில் அமைந்த உருப்படிகள் 4 தருக.
15. ஸ்தாயிக் குறியீடுகளைப் பயன்படுத்தி சஞ்சாரம் ஒன்றினை இவ் இராகத்தில் எழுதுக.

மிருதங்கம்

1. தென்னிந்தியக் கச்சேரிகளில் பிரதான தாள வாத்தியமாக விளங்குவது எது?
2. வாத்தியத்ரயத்தில் இது எத்தனையாவதாக சிறப்பிக்கப்படுகின்றது ?
3. தமிழிசையில் இக் கருவி எவ்வாறு அழைக்கப்படுகின்றது ?
4. எம்மரங்களினால் மிருதங்கம் செய்யப்படுகின்றது ?
5. மிருதங்கத்தின் வலது இடது பக்கத்தினை எவ்விதம் அழைப்பர்?இவை ஒவ்வொன்றும் எத்தனை தோல்களால் ஆனவையாக உள்ளன என்பதை விளக்குக.
6. கரணை எவ்வாறு போடப்படுகின்றது?

7. மிருதங்கத்தின் கணீர் என்ற ஒலியைத் தரும் பகுதி எது?
8. தொப்பி என்று அழைக்கப்படும் பகுதி எது?
9. குறைந்த சுருதியில் பாடுபவருக்கும் அதிக சுருதியில் பாடுபவருக்கும் பயன்படுத்தப்படும் மிருதங்கங்கள் எவை?
10. மிருதங்கத்தின் இடந்தலை சுருதி சேர்க்கப்படும் இரு சுருதிகளும் எவை?
11. மிருதங்கத்தின் அமைப்பினை தெளிவாக விளக்குக.
12. மிருதங்கத்தின் சுருதி சேர்க்கும் முறை, வாசிக்கும் முறை என்பவற்றைத் தருக.
13. மிருதங்கவாத்தியத்தின் படம் வரைந்து ,பாகங்களை குறிப்பிடுக.
14. மிருதங்கம் வாசிப்பதில் பிரபல்யமானோர் நால்வரின் பெயர்களைத் தருக.

இந்தியாவின் 17ம்,18 ம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாச்சாரப்பின்னணி

1. புரந்தரதாசரின் வாழ்க்கைக் காலம் யாது?
2. அப்பியாசகானத்திற்குரிய வழிமுறைகளை வகுத்ததால் எச்சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்?
3. சங்கீதபிதாமகர் என சிறப்பித்துக் கூறப்படுபவர் யார்?
4. இவரது முத்திரைப் பதம் யாது?
5. இவரால் அப்பியாசகான வரிசைகளை பாடுவதற்கென வகுக்கப்பட்ட இராகம் யாது?
6. இராமாமாத்தயரால் எழுதப்பட்ட சமஸ்கிருத கிரந்தம் எது?இது எவ் நூற்றாண்டில் எழுதப்பட்டது?இவ் கிரந்தத்தில் இவரால் குறிப்பிடப்பட்ட அம்சங்களை குறிப்பிடுக.
7. சதுர்தண்டிப்பிரகாசிகை என்ற நூல் யாரால் எப்போது எழுதப்பட்டது?இந்நூலின் சிறப்பு அம்சங்களை தருக.
8. முத்துத்தாண்டவரால் இயற்றப்பட்ட கீர்த்தனைகள் எம் மொழியில் இயற்றப்பட்டுள்ளன?இவை எவ்விதம் போற்றப்படுகின்றன?
9. சங்கிரகசூடாமணி எனும் நூல் யாரால் இயற்றப்பட்டுள்ளது?
10. கனம் என்னும் மார்க்கத்தை சாதித்துக் காட்டியவர் யார்?
11. சங்கீத மும்மூர்த்திகள் யாவர்?
12. கர்நாடக இசையின் பொற்காலம் என போற்றப்படும் காலப்பகுதி எது?
13. சங்கீத மும்மூர்த்திகள் ஒவ்வொருவரும் எவ்வவ் மொழிகளில் தமது உருப்படிகளை இயற்றியுள்ளனர்?
14. இராமநாடகக் கீர்த்தனை யாரால்?எந் நூற்றாண்டில் இயற்றப்பட்டுள்ளது?
15. குற்றாலக்குறவஞ்சி எனும் இசை நாடகம் யாரால் எழுதப்பட்டது?
16. அருணாசலக்கவிராயரால் எழுதப்பட்ட நாடகங்கள் 3 தருக.
17. ஆயிரக்கணக்கான கீதங்கள், பிரபந்தங்களை இயற்றிய பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் எவ்வாறு சிறப்பித்துக் கூறப்படுகிறார்.
18. தானவர்ணமார்க்கதரிசி என சிறப்புப் பெயர் பெற்றவர் யார்?தசவிதகமகங்களை வெளிப்படுத்தும் முகமாக இவரால் இயற்றப்பட்ட வர்ணம் யாது?
19. தாம் இயற்றிய உருப்படிகள் மூலம் இராகங்களிற்கு ஜீவனளித்து அவற்றின் ஸ்வரூபங்கள் அழியா வண்ணம் இசை உலகிற்கு அளித்து இறைவனுடன் நேரில் சம்பாஷித்து வாக்கேயகாரத்துவத்தின் உச்ச நிலையை அடைந்த வாக்கேயகாரர்கள் யாவர்?
20. குருகுலவாசமுறை வழக்கத்திற்கு வந்த காலப்பகுதி ?
21. தியாகராஜ சுவாமிகள், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமாசாஸ்திரி இவர்களின் உருப்படிகள் எவ்விதம் அமைந்துள்ளன எனக் கூறி,இவர்களது உருப்படிகள் முறையே எவ் ரசத்திற்கு ஒப்பிடப்படுகின்றது?
22. ஸரபநந்தன தாளத்தில் பல்லவி பாடியவர் யார்?
23. ஸ்வராட்சர அணிகளை பயன்படுத்தி உருப்படிகளை இயற்றியவர் யார்?
24. இந்தியாவின் 17ம், 18ம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாச்சாரப் பின்னணி பற்றி ஒப்படை எழுதுக.

www.ked.lk

வாக்கேயகாரர் (முத்துஸ்வாமிதீட்சிதர்)

அ.முத்துஸ்வாமிதீட்சிதரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப் பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

1. இவரது வாழ்க்கைக் காலம் யாது?
2. பிறந்த இடம், தாய், தந்தை பெயர் என்பவற்றைத் தருக.
3. இவரது இளமைக் காலம் (கல்வி, குரு, பாடத்தொடங்கிய விதம் உட்பட) எழுதுக.
4. இவர் பாடிய முதல் கீர்த்தனை?அதன் இராகம் யாது?
5. இவரது முத்திரைப் பதம் யாது?
6. இவர் இயற்றிய உருப்படிகள் பத்து தருக. (இராகம் உட்பட)
7. இவரது உருப்படிகளின் சிறப்பம்சங்களை தெளிவாக எழுதுக
8. இவர் ஆற்றிய அற்புதங்கள் நான்கு தருக.
9. இவரது நான்கு சிஷ்யர்களின் பெயர்களைத் தருக.
10. சங்கீத மும்மூர்த்திகளில் இவர் எத்தனையாவதாக சிறப்பித்துக் கூறப்படுகிறார்?
11. வெங்கடமகி அவர்களின் பாரம்பரியத்தில் இருந்து தோன்றிய இவர் எத்தனையாவது வயதில் காலமானார்?

***

www.lkedu.lk